
அட்டைப்படக் கட்டுரை




ஜெனோ மோகன்
சமூகச் செயல்பாட்டாளர்




# பிறப்பிலும் வெறுப்பு.. அனைத்திலும் மறுப்பு..

“ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்’, ‘பொம்பள சிரிச்சா போச்சு புகையில விரிச்சா போச்சு’, ‘பொட்டக் கோழி கூவியா பொழுது விடியப் போகுது’ போன்ற சொல்லாடல்களைப் போகிற போக்கில் நாம் அவ்வளவு எளிதாகக் கடந்துவிட முடியாது. அவைகள் பெண்கள் மீது இச்சமூகம் எவ்வகையான மதிப்பீடுகளை வைத்திருக்கிறது என்பதன் வெளிப்பாடு.”

இன்று பெண்கள் இல்லாத துறைகளே கிடையாது. அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சாதனை படைத்தவர்களாக ஆண்களுக்குச் சரிநிகராக வலம் வருகிறார்கள். கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், அரசியல், சமூகம் போன்ற நிலைகளில் பெண்களின் பங்கு தவிர்க்க முடியாததாக மாறிவருகிறது என்றாலும், அவர்கள் பெண் என்பதாலேயே பல இன்னல்களை எல்லாத் தளங்களிலும் சந்திக்க வேண்டிய சூழல் அதிகரித்துக்கொண்டே வருகிறது. பெண்களைப் பாதுகாக்க, அவர்களுக்கான உரிமைகளை நிலை நாட்ட, எத்தனை சட்டங்கள் வந்தாலும் பெண்கள் மீதான வன்முறைகளும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் ஆண்-பெண் சமத்துவமின்மை குறித்த பாலினப் பாகுபாடுதான்.

‘ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்’, ‘பொம்பள சிரிச்சா போச்சு, புகையில விரிச்சா போச்சு’ ‘பொட்டக் கோழி கூவியா பொழுது விடியப் போகுது’ போன்ற சொல்லாடல்களைப் போகிற போக்கில் நாம் அவ்வளவு எளிதாகக் கடந்துவிட முடியாது. அவைகள் பெண்கள் மீது இச்சமூகம் எவ்வகையான மதிப்பீடுகளை வைத்திருக்கிறது என்பதன் வெளிப்பாடு. பெண் பிள்ளைகள் பெறுவதையே சாபமாக, இழிவாகக் கருதுகின்ற பண்பாட்டுச் சூழல் ஒருபுறம் என்றால் “மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டும்” என்ற கவிமணி வரிகள் ஒருபுறம், “எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி” என்கிற பாரதியின் பாடல்கள் மறுபுறம். பெண்ணை இழிவாகப் பார்ப்பதன் விளைவே கவிஞர்களின் வரிகளில் கனலாய்த் தெறிக்கிறது.

மேல்சாதி-கீழ்சாதி என்று சாதியை மையமாகக் கொண்ட பாகுபாட்டைச் சாதியப் பாகுபாடு என்கிறோம். ஏழை-பணக்காரன் என்று பொருளாதாரத்தை மையப்படுத்திய பாகுபாட்டை வர்க்கப் பாகுபாடு என்கிறோம். கறுப்பு-வெள்ளை என்று நிறத்தை அடிப்படையாகக் கொண்ட பாகுபாட்டை இனப்பாகுபாடு என்கிறோம். இவைகள் போலவே ஆண்-பெண் என்கிற பாலினத்தை மையமாகக் கொண்ட பாகுபாட்டைப் பாலினப் பாகுபாடு என்கிறோம். இந்தப் பாலினப் பாகுபாடே சமூகத்தில் நிலவுகின்ற அனைத்துப் பாகுபாடுகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது.

தற்போது ஆண்-பெண் என்ற பாகுபாட்டைக் கடந்து மூன்றாம் பாலினம் குறித்த பாகுபாடும் அவர்களின் பிரச்சனைகளும் உலகெங்கிலும் விவாதமாகப் பேசப்படுகிறது. திருநங்கைகள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களை ஒரு பெண்ணாக வெளிப்படுத்தவே பல நிலைகளில் போராடி வருகின்றனர். எனினும், அவர்களுக்கான உரிய அங்கீகாரம் என்பது இதுவரை கிடைக்கவில்லை.

பிறப்பு முதல் இறப்பு வரை பெண்ணின் வாழ்வியல், ஆணைச் சார்ந்ததாகவே இருக்க வேண்டும் என்கிற ஆணாதிக்கச் சமூகத்தின் அடக்குமுறை இன்றும் தொடர்கிறது. பெண்ணாகப் பிறந்தவள் முதலில் தனது தகப்பன் சார்ந்தும், பிறகு சகோதரனைச் சார்ந்தும், அடுத்து கணவனைச் சார்ந்தும் இறுதியில் மகனைச் சார்ந்தும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். அதுதான் சரியானதும், நீதியானதுமென தலைமுறை தலைமுறையாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. பெண் குறித்த ஒரு ஆணின் பார்வை என்பது அவள் ஆணுக்காகவே படைக்கப்பட்டவள் என்றும் அவளுக்கென்று சுய முடிவோ, சுய சிந்தனையோ, சுய மரியாதையோ இருக்கக்கூடாது என்றும், அதை மீறுபவள் ஒழுக்கம் கெட்டவளாக, எல்லோராலும் புறக்கணிக்கப்பட வேண்டியவளாக இருக்க வேண்டும் என்பதுதான். சமூக நிலை இவ்வாறெனில் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகளில் நிகழக்கூடிய பாலினப் பாகுபாடுகள் குறித்துப் பின்வருமாறு காணலாம்.

## கல்வி

இந்திய சமூகத்தின் கல்வி என்பது குருகுலக் கல்வி முறையாக மட்டுமே இருந்தது. குருகுலக் கல்வியில் ஆண்கள் மட்டுமே கல்வி பெறத் தகுதியுடையவர்கள். ஏனெனில் அங்குக் கற்பிக்கப் பட்டவை வேதங்களும் மந்திரங்களும்தான். இவைகளைப் பெண்கள் கேட்கவோ உச்சரிக்கவோ கூடாது. இவ்வாறாகப் பெண்களுக்குக் கல்வி முற்றிலும் மறுக்கப்பட்ட நம் சமூகத்தில் 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டுக் காலத்தில்தான் பெண் கல்வியின் அவசியம் உணரப்பட்டது. அதிலும் குறிப்பாகத் தமிழ்ச் சமூகத்தில் பெரும் புரட்சியே ஏற்பட்டது. பாவேந்தர் பாரதிதாசன் “கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம் போன்றவர்கள். அந்நிலத்தில் புற்கள் விளைந்திடலாம். நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை” என்று பாடினார். அவரது குருவான பாரதியார் “பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்” என்று முழங்கினார். தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு கடந்த 2021இல் வெளிவந்த ஆக்ஸ்பாம் புள்ளி விபரப்படி இந்தியாவில் ஆண்கள் 75.26 சதவிகிதமும், பெண்கள் 53.63 சதவிகிதமும் கல்வி பெற்றிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், பல்வேறு தடைகளைத் தாண்டி கல்வி கற்க வரும் பெண்களுக்குக் கல்வி நிலையங்களில் பெண் என்பதாலேயே பல கொடூரங்கள் நிகழ்கின்றன. சமீபத்தில் சென்னை அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தமிழகத்தையே அதிர வைத்தது. இதுபோல வெளிவராத பல்வேறு பாலியல்



கொடூரங்கள் அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருப்பது வேதனையளிப்பதாகவும், பெண் கல்வியையே கேள்விக்குட்படுத்துவதாகவும் உள்ளன.

## பொருளாதாரம் மற்றும் வேலை வாய்ப்பு:

அக்காலத்தில், பொருளாதாரம் என்பது நிலம் மற்றும் அதைச் சார்ந்த வேலைகளாக மட்டுமாகவே இருந்தது. அதிலும் நிலவுடைமையாளரின் வாரிசாக ஒரு பெண் இருக்க முடியாது. தகப்பனுக்குப் பிறகு நிலம் என்பது ஆண் வாரிசுகளின் உடைமையாக மட்டுமே இருந்து வந்தது. ஆண் வாரிசுகளே இல்லாத பட்சத்தில்தான் பெண்ணுக்கான உரிமை என்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. அதிலும் ஆண் வாரிசு அற்றவர்கள் தங்களது உடன் பிறந்த ஆண்களின் வாரிசுகளுக்கு மட்டுமே நிலத்தில் பங்கு உண்டு என ஆணாதிக்க வழிமுறையையே பின்பற்றினார்கள்.

தலைமைத்துவம் என்பது அன்றிலிருந்து இன்று வரை ஆண்களைச் சார்ந்தே இருக்கிறது. இந்தியத் தொழிலதிபர்களின் வரிசையைக்கூட டாடா-பிர்லாவிலிருந்து அம்பானி-அதானி என்றுதான் மாற்ற முடிகிறதேயழிய பெண் தொழிலதிபர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அதைத் தாண்டி பொருளாதாரத்தின் அடுத்த தளமான வேலை வாய்ப்பை எடுத்துக்கொண்டால், இன்றைய தகவல் தொழில்நுட்பத் துறையில் பெண்களின் பங்கு கணிசமாக மேலோங்கியிருக்கிறது. சினிமா மற்றும் சமூக வலைதள ஊடக வேலை வாய்ப்புகளில் பெண்களின் நிலை உயர்ந்திருந்தாலும் பாலினப் பாகுபாட்டின் அடித்தளமான வன்முறைகள் இங்குதான் கொடிகட்டிப் பறக்கின்றன. வேலைக்குப் போகின்ற பெண்களாக இருந்தாலும் குடும்ப வேலைகளையும், பிள்ளை வளர்ப்பையும் சேர்த்து சுமக்கின்றவளாகவே பெண் கருதப்படுகிறாள். ஏனென்றால் இவையெல்லாம் பெண்களுக்கு மட்டுமான வேலையாகவே திணிக்கப்படுகின்றன. பொருளீட்டும் பெண்கள் தங்களது இன்றியமையா அடிப்படைத் தேவைகளுக்குக்கூட ஆண்களிடம் கையேந்தி நிற்கக்கூடிய அவல நிலையே இன்றும் தொடர்கிறது என்பதும் பாலினப் பாகுபாட்டின் உச்சமாகும்.

கல்வி என்பதே முற்றிலும் மறுக்கப்பட்ட பெண்கள் வேலைக்குச் செல்வது என்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. பிறப்பின் அடிப்படையில் சரிசமமாக இருக்கும் நம் நாட்டுப்பெண்களுக்கு (48.3

சதவிகிதம்) வேலைவாய்ப்பில் மட்டும் சமவாய்ப்பு என்பது மறுக்கப்படுகிறது. சமீபத்திய புள்ளி விபரப்படி 20 சதவிகிதப் பெண்கள் மட்டுமே கண்ணியமான வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர். 18 வயது முதல் 40 வயது வரையிலான பெண்கள் வேலைக்குச் செல்லவேண்டும் என்று விரும்பினாலும், பெரும்பாலான ஆண்கள் அதற்கு அனுமதிப்பதில்லை. அதையும் கடந்து வேலைக்குச் செல்லும் பெண்களில் 70 சதவிகிதம் பேர் பல்வேறு வகையில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாவதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. பொதுவாகப் பெண்கள் தங்கள் திறமையினாலும் கல்வியறிவாலும் தனித்தன்மையாலும் உயர் நிலையை அடைந்தாலும் அவர்கள் மீதான ஆண்களின் வக்கிரப் பார்வை குறைந்த பாடில்லை. பெண்களைப் பெரும்பாலான ஆண்கள் கவர்ச்சிப் பொருளாகவே பார்க்கிறார்கள். வளர்ந்து வரும் இன்றைய அறிவியல் யுகத்திலும் பாலினப் பாகுபாட்டினால் ஏற்படக்கூடிய ஆண்களின் அடிப்படைப் பார்வை என்பது இன்னும் மாறவில்லை.




அரசியல்: மன்னராட்சி முறையில் முடிசூட்டிக் கொள்வது ஆண் வாரிசுகளுக்கு மட்டும்தான் என்பதையே வேதங்களும் மந்திரங்களும் கற்பித்துள்ளன. அங்கும் பெண்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகவே கருதப்பட்டார்கள். மன்னராட்சி மாறி மக்களாட்சி நடைமுறைக்கு வந்து 75 ஆண்டுகளைக் கடந்தும் இன்றைய நிலையும் அவ்வாறே இருக்கிறது. சட்டத்தின் முன்பு அரியணை ஏறுவது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமம் என்றாலும், ஆண்களே இங்கு கோலோச்சுகிறார்கள்.

இதுவரையிலான 14 இந்தியப் பிரதமர்களில் இந்திரா காந்தி மட்டுமே பெண் என்பது குறிப்பிடத்தக்கது. அவரும் குடும்ப அரசியல் பின்னணியிலேயே பிரதமராகப் பதவி வகித்தார். தமிழக அரசியலைப் பொறுத்தவரை கடந்த 75 ஆண்டுகளில் 14 முதலமைச்சர்களில் ஜானகி ராமச்சந்திரன் மற்றும் ஜெயலலிதா ஆகிய இருவர் மட்டுமே பெண்கள் முதலமைச்சர்களாக இருந்துள்ளனர். இன்றைய தமிழக அரசியல் நிலவரப்படி 35 அமைச்சர்களில் இருவர் மட்டுமே பெண்களாக இருக்கிறார்கள். உள்ளாட்சிகளில் பஞ்சாயத்துத் தலைவர் முதல் மேயர் வரை பெண்களுக்கான வாய்ப்புகள் கிடைத்து பதவிக்கு வந்தாலும் அவர்களைப் பொம்மைகளாக வைத்துக்கொண்டு ஆண்களே அதிகாரம் செலுத்துகின்ற ஆதிக்க நிலை இன்றும் தொடர்கிறது. மேற்கண்ட அரசியல் தரவுகள் தற்போதைய பாலினப் பாகுபாட்டின் உச்சபட்ச சாட்சியமாகத் திகழ்கிறது.

இந்தியாவின் பாலின சமத்துவத்தைப் பற்றி ஐ.நா. பெண் அதிகாரிகள் கூறுகையில், "பெண்கள் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் தொழில் துறைகளுக்கு அதிக முதலீடுகள் வழங்குவதன் மூலம், அடிமட்டத்தில் உள்ள பெண்களின் மீது கவனம் செலுத்துவது இந்தியாவில் பாலினச் சமத்துவத்தைத் துரிதப்படுத்துகிறது. ஆனால், சில சமூக விதிமுறைகள், மட்டுப்படுத்தப்பட்ட தொழிலாளர் பங்கேற்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகள் முழுப் பாலின சமத்துவத்திற்கு இடைவெளிகளாக உள்ளன" என்று தெரிவிக்கின்றனர்.

ஏன் இந்தப் பாகுபாடு? மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கின்ற பெண்கள் மக்களாட்சி முறையில் மட்டும் புறக்கணிக்கப்படுகிறார்கள். இங்கே சமநிலையை எட்டுவதற்கு என்னதான் வழி இருக்கிறது? குறைந்தபட்ச 33 சதவிகித இடஒதுக்கீடு என்னும் சமூக நீதியைச் சுதந்திர இந்தியாவில் சட்டம் இயற்றியும் இதுவரை நடைமுறைப்படுத்த முடியவில்லை. பெண்களின் பங்களிப்பு எவ்வாறாக இருக்கிறதென்றால், ஓட்டளிப்பது மட்டுமே நமது பணி என்கிற அவல நிலையே நீடிக்கிறது. இன்றைக்கு அரசியல் கட்சிகள் தங்களது பிரச்சாரக் கூட்டங்களுக்கு எண்ணிக்கை அடிப்படையில் ஆட்களைத் திரட்டுவதற்காகப் பெண்களையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். வாக்களிப்பதிலும் எங்கள் ஓட்டு பணத்துக்கே என்கிற மனநிலைக்குப் பெண்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இறுதியாக.. பாலினச் சமத்துவம் என்பது சமூகக் கட்டமைப்பில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஆரம்பமாகிறது. பாலினச் சமத்துவம் குறித்து முற்போக்காகப் பேசக்கூடியவர்கள் கூட அச்சமத்துவத்தைத் தங்கள் குடும்பங்களில் நிறைவேற்றிடத் தவறி விடுகிறார்கள். குடும்பங்களில் குழந்தைகள் சமத்துவத்தைப் பார்த்து வளர்கின்ற சூழலை உருவாக்கினால் மட்டுமே பாலினச் சமத்துவம் குறித்த ஆரோக்கியமான சிந்தனை வளரும். அன்றாடம் செய்கின்ற அனைத்து வீட்டு வேலைகளையும் சமநிலையில் பகிர்ந்து செய்யக் கற்றுக்கொடுக்க வேண்டும். பெண் என்பதால் இவற்றைச் செய்யவேண்டும் என்றும் ஆண் என்பதால் இவற்றைச் செய்யக்கூடாது என்றும் பாகுபடுத்தல் கூடாது. உணர்வு நிலைகளில் கூடப் பெண் என்பவள் சிரிக்கக் கூடாது என்றும் ஆண் என்பவன் அழக்கூடாது என்றும் சொல்லியே வளர்க்கப்படுகின்ற பாகுபாட்டுடன் கூடிய போக்குகள் மாறவேண்டும். அதுவே சமத்துவ சமுதாயத்திற்கு வழிவகுக்கும்.